பக்கங்கள் 21+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 19 ஞாயிற்றுக்கிழமை 05.10.2025 | அதிர்வு 66

## யாழில் கடை உரிமையாளர் கத்தியால் குத்திக் கொலை!

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணம், சுன்னாகம் – ஏழாலை பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற கத்திக் குத்துத் தாக்குதலில் ஒருவர்

02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# வீரியம் குறையாத பிரேரணையை நிறைவேற்ற இணை அனுசரணை நாடுகள் பாடுபட வேண்டும்

## சுமந்திரன் பகிரங்கக் கோரிக்கை

(ந.லோகதயாளன்)

“வீரியம் குறையாத வண்ணம் முக்கிய விடயங்களைத் தொடர்ச்சியாக உள்ளடக்கியதாக ஐ.நாவின் புதிய பிரேரணையை நிறைவேற்ற இணை அனுசரணை நாடுகள் பாடுபட வேண்டும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார்.

இலங்கை தொடர்பான ஐ.நாவின் புதிய தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

02▶

# கோர விபத்தில் மூவர் சாவு!

(க.மகாதேவன்)

நாரம்மல – குருநாகல் பிரதான வீதியில் நாரம்மல நகருக்கு அருகில் லொறி ஒன்று, இ.போ.ச. பஸ்ஸுடன் மோதி இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.இன்று அதிகாலை வேளை இந்த விபத்து இடம்பெற் றுள்ளது.

குருநாகலில் இருந்து நாரம்மல நோக்கிப் பயணித்த லொறி, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் வலது பக்கத்தை விட்டு விலகி, கட்டுநாயக்காவில் இருந்து அக்கரைப்பற்று நோக்கிப் பயணித்த பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

02▶



# வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீச்சு!

## அச்சுவேலியில் வன்முறைக் கும்பல் வெறியாட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அச்சுவேலிப் பகுதியில் வீடொன்றின் மீது வன்முறைக் கும்பல் ஒன்று தாக்குதல் மேற்கொண்டதுடன் பெற்றோல் குண்டுகளையும் வீசி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

பத்தைமேனி பகுதியில் உள்ள வீடொன்றுக்கு நேற்று சனிக்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் சென்ற வன்முறைக் கும்பல் ஒன்று வீட்டின் கதவுகளை உடைத்து திறக்க முயற்சித்





துள்ளது.

வீட்டில் இருந்தோர் உட்பக்கமாகக் கதவுகளை மூடி விட்டு கூக்குரல் எழுப்ப தாக்குதலாளிகள் வீட்டின் மீது பெற்றோல் குண்டுகளை வீசி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்குத்தகவல்வழங்கப்பட்டதை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

---

# யாழில் சீரற்ற காலநிலையால் 14 பேர் பாதிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று அதிகாலை நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக, மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று அதிகாலை நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக, மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன்படி, வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/28 கிராம அலுவலர் பிரிவில் இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/169 கிராம அலுவலர் பிரிவில் வீடு ஒன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் நால்வர் பாதிக்கப்பட்டுள்ளனர்.” - என்றார்.

---

### கோர விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தில் லொறியில் பயணித்த சாரதி, ஆண் ஒருவர், பெண்கள் இருவர் மற்றும் சிறுமிகள் இருவர் ஆகியோர் காயமடைந்த நிலையில் நாரம்மல மற்றும் குருநாகல் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது, சிகிச்சை பலனின்றி லொறியின் சாரதி, ஆண் ஒருவர் மற்றும் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்கள் பொலனறுவையைச் சேர்ந்த 41, 80 மற்றும் 82 வயதுடையவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதே லொறியில் பயணித்த 40 வயது பெண் ஒருவர், 16 வயது மற்றும் 9 வயது சிறுமிகள் இருவர் குருநாகல் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இ.போ.ச. பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், நாரம்மலை பொலிஸார் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளார்.

கடையொன்றில் பலவந்தமாகப் பொருள்களைத் தருமாறு கோரி முரண்பாட்டில் ஈடுபட்ட இருவர் கடையின் உரிமையாளரைக் கத்தியால் தாக்கியுள்ளனர்.

இதன்போது பலத்த காயமடைந்த 35 வயதுடைய கடை உரிமையாளர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர்கள் இருவரும் மதுபோதையில் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஏழாலை பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### வீரியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“ஜெனிவாவில் நாளைய தினம் 60ஃ01 பிரேரணை நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேநேரம் சென்ற வருடம் இணை அனுசரணை நாடுகள் தீர்மானம் கொண்டு வந்தபோது இலங்கை அரசாங்கம் வெளிப்படையாக நாம் அதனை எதிர்க்கின்றோம் எனச் சொல்லியிருந்தாலும் வாக்கெடுப்பின் போது வாக்கெடுப்பைக் கோரவில்லை. அதனால் வாக்கெடுப்பு இன்றி அது நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தடவையும் அப்படியான ஒரு எதிர்பார்ப்போடு இணை அனுசரணை நாடுகள் இருக்கின்றன. இதற்காக இலங்கை அரசாங்கம் கேட்ட சில திருத்தங்களையும் மேற்கொண்டதாக நாம் அறிகின்றோம். அது எங்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கின்றது. ஏனெனில் இந்தப் பிரேரணையின் சில வீரியங்களைக் குறைப்பதற்காக இலங்கை அரசாங்கம் அப்படியான நடவடிக்கைகளை எடுத்திருக்கக் கூடும். ஆனால், பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டியது எல்லாவற்றிலும் விட முக்கியமான விடயம்.

சில வார்த்தைப் பிரயோகங்களினால் சில நாடுகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரேரணை நிறைவேற்றப்படாது போனால் அது பாரியதொரு பாதிப்பை ஏற்படுத்தும். சிலர் கூறக்கூடும் இந்தத் தீர்மானங்களினால் எந்தப் பிரயோசனமும் கிடையாது. தீர்மானங்கள் நிறுத்தப்பட வேண்டும் என எதிர்த்தவர்கள் எல்லாம் இருக்கின்றனர்.

சர்வதேசத்தின் பார்வை இலங்கை மீது தொடர்ச்சியாக இருக்க வேண்டுமானால் விசேடமாக பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் தொடர்பில் சர்வதேசத்தின் பார்வை இலங்கை மீது அதிலும் விசேடமாக வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற போர் சம்பந்தமாக இருக்க வேண்டுமானால் இந்தப் பிரேரணைகளால் தொடர்ச்சியாக நிறைவேற்றுவது அத்தியாவசியம். இது பலருக்குப் புரியாத விடயமாகவும் இருக்கலாம். இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டால்தான் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உயர்ஸ்தானிகருக்கு இலங்கை தொடர்பான விடயங்களில் கரிசனை செலுத்த முடியும்.

ஆகையினாலே புதிய பிரேரணை ஒன்றைத் தீர்மானமாக நிறைவேற்ற வேண்டியது அத்தியாவசியம். அந்த வகையில் இணை அனுசரணை நாடுகளுக்கு நாங்கள் நன்றி செலுத்துகின்றோம். அதில் உள்ளடக்கம் தொடர்பில் எமக்குச் சில ஏமாற்றங்கள் இருந்தாலும் கூட அந்த ஏமாற்றங்களையும் பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளோம்.

இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டு இந்தப் பிரேரணையை முன்வைத்து அதை நிறைவேற்ற சகல நடவடிக்கைகளையும் அவர்கள் எடுப்பதனால் பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளுக்கு நாம் நன்றி செலுத்துகின்றோம். கூடிய அளவுக்கு வீரியம் குறையாத வண்ணம் முக்கிய விடயங்களைத் தொடர்ச்சியாக உள்ளடக்கியதாக அந்தப் பிரேரணையை நிறைவேற்றப் பாடுபடுங்கள் என விநயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.” - என்றார்.



# சிறப்புற இன்று நடந்தேறிய வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்

(பூ.லின்ரன்)

யாழ்ப்பாணம் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர் திருவிழா இன்று சிறப்பாக இடம்பெற்றது.

கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் சிறப்பு கிரியைகளை நடத்தினர். காலை 7:30 மணியளவில் வசந்த மண்டப பூசைகள் இடம்பெற்றமையைத் தொடர்ந்து சரியாக 9:30 மணியளவில் வல்லிபுர ஆழ்வார் தேருலா வந்தார்.

முன்னே ஆஞ்சநேயப்பெருமான் செல்ல, பின்னே விநாயகப்பெருமானும், லஷ்மி தேவியை தொடர்ந்து வல்லிபுரத்து சக்கரத்து ஆழ்வார் வலம்வந்தார்.

இன்றைய தேரத்திருவிழாவில் அடியவர்கள் அங்க பிரதட்டை, பால் காவடி, செடில்காவடி, தீச்சட்டி உட்பட்ட பல்வேறு நேறறிக்கடன்களை நிறைவேற்றினர்.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் திருவிழாவில் கலந்துகொண்டனர்.

போக்குவரத்து ஒழுங்குகளை இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் போக்குவரத்து சங்கம் என்பன மேற்கொண்டிருந்தன. போக்குவரத்துக்காக ஆலயத்திற்கான மார்க்கம் ஒருவழிப்பாதையாக மாற்றப்பட்டிருந்தது. குறிப்பாக பருத்தித்துறை, மந்திகை போன்ற வழிகளினூடாக ஆலயத்திற்கு வருகை தரமுடியும். வெளியேறும் பாதையாக வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பகுதியிலிருந்து பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் மாவடிச் சந்தியூடாக ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

போக்குவரத்து மற்றும் மக்களுக்கான பாதுகாப்பு ஒழுங்குகளை காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் பருத்தித்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர், பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் நேரடியாக கண்காணித்து செயற்படுத்தினர். ஒருவழிப்பாதை நடைமுறை நாளை வல்லிபுர ஆழ்வார் தீர்த்தத் திருவிழாவின்போதும் நடைமுறைப்படுத்தப்படும் என காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

முதலுதவி மற்றும் அவசர சுகாதார வசதிகளும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை முதலுதவி சங்கம், மக்கள் முதலுதவி சங்கம் போன்ற பல்வேறு அமைப்புக்கள் ஈடுபட்டன.

இதேவேளை நாளை சமுத்திர திருவிழாவிற்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.







# வீர மறவர்களே..!


**மாவீர்களான குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கைகளின் 38 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இந்தக் கவிதை பிரசுரிக்கப்படுகின்றது.**

காந்திய தேசத்தின் அமைதிப்
படையால் தமிழ் மக்களின்
தேசம் காண வந்த வீரத் தளபதிகள்
குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட
பன்னிரு வேங்கைகள் கைதாகி
விதையாகிப் போனார்கள்!

இலங்கை – இந்தியக் கூட்டு
சதியில் சிக்கி – தேச
விடுதலையை மூச்சாக்கி
சிங்கள இராணுவத்தின்
பிடியில் மண்டியிடாது
வித்தாகிப் போனார்கள்!

சயனைட் அருந்தி மடிந்த
செய்தியறிந்த தமிழர்
தேசம் கண்ணீர் மழையில்
நனைந்தது – தலைவனின்
கோபத்தை நெருப்பாக்கிவிட்டு
விருட்சமாகிப் போனார்கள்!

ஆண்டுகள் முப்பத்தெட்டு
கடந்து விட்டன – ஆனாலும்
தமிழர் தேசம் உங்கள்
தியாகத்தை நினைவு கொண்டு
தலைவணங்கி நிற்கின்றது
வீர மறவர்களே..!





கந்தசாமி
தசரூபன்

# மக்களின் வரிப்பணத்தை நிலையான வைப்பிலிட்டு வட்டி ஈட்டுவது தவறு!

## நகரசபை உறுப்பினர் கஜிதன் வலியுறுத்து

(த.சுபேசன் )

மக்களின் வரிப்பணத்தை வங்கிகளில் நிலையான வைப்பில் வைத்து வட்டி ஈட்டுவது தவறான செயற்பாடு என்று தேசிய மக்கள் சக்தியின் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகர சபையின் 11 வட்டாரங்களிலும் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்த வேண்டிய தேவைப்பாடு உள்ளது. இருப்பினும் சபை நிலையான வைப்பில் அதிக நிதியை தொடர்ந்தும் பேணி



வருகின்றது.

உள்ளூராட்சி சபைகள் பெருமளவான நிதியை நிலையான வைப்பில் வைத்திருப்பதால் வேறு நிறுவனங்களிடம் இருந்து நிதியைப் பெற்று அபிவிருத்தி செய்ய முடியாது.

அபிவிருத்திகளை குறிப்பிட்ட காலத்துக்குள் செய்து முடிக்க வேண்டும். அதனை விடுத்து அந்த நிதியை ஒதுக்கத்துக்கு மாற்றி நிலையான வைப்புக்குக் கொண்டு செல்வது பொருத்தமற்றது.

சாவகச்சேரி நகர சபையானது நிலையான வைப்பில் உள்ள பணத்தை எடுத்து யுத்ததால் பாதிக்கப்பட்ட கடைத் தொகுதிகளை மீளவும் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொது மக்களின் வரிப்பணத்தை வங்கியில் சேமிப்பது பொருத்தமற்றது.– என்றார்.





# உலக வதிவிட தினத்தை முன்னிட்டு வவுனியாவில் வீடுகள் கையளிப்பு!

(கி.வசந்தன்)

உலக வதிவிட தினத்தை முனானிட்டு வவுனியாவில் வீடுகள் மற்றும் உறுதிப் பத்திரங்கள் கையளிக்கும் நிகழ்வு இன்று நடைபெற்றது.

நாடு பூராகவும் உலக வதிவிட தினத்தின் 39 ஆவது ஆண்டினை முன்னிட்டு "என்னுடைய இடமும் அழ கான வாழ்க்கையும்" எனும் தொனிப் பொருளில் வீடு கையளிக்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில், வவுனியா பேயாடி கூழாங்குளம் பகுதியில், ம.சிவகுமார் என்ற பயனாளிக்குக் கூட்டுறவு அபிவி ருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங் கவினால் வீடு கையளிக்கப்பட்டதுடன், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான காணி உறுதிப்பத்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை, வவுனியாவில் உள்ள நான்கு பிரதேச சபை பிரிவுகளிலும் 20 வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளதுடன், 62 பேருக்கு உறுதிப்பத்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் ந.கமலதாசன், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட அதிகாரி தேவிகா விஜயரத்தின மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற உறுப் பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

















நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஜெனிவாப் பிரேரணை

ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கையில் மீள்நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் தொடர்பான புதிய பிரேரணை நாளை அல்லது மறு தினம் எடுத்துக்கொள்ளப்பட இருப்பதாகத் தெரிகிறது.

இந்த விடயத்தில், இலங்கை தொடர்பாக இதுவரை இருந்த தீர்மானம் காலாவதியாகும் பின்புலத்தில், புதிய பிரேரணை மூலம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு இலங்கையைக் கண்காணிப்பில் வைத்திருக்க வழி செய்யும் விதத்தில் பிரதான அனுசரணை வழங்கும் ஐந்து நாடுகளால் அது முன்மொழியப்பட்டுள்ளது. பிரிட்டன், கனடா, மலாவி, மொண்டிநிகாரோ, வடக்கு மஸிடோனியா ஆகியவையே அந்த ஐந்து நாடுகள். தவிரவும் மேலும் 22 நாடுகள் - பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகள் - இந்தப் புதிய பிரேரணைக்கு ஆதரவாக, இணை அனுசரணை வழங்குவதாக, ஏற்கனவே கையெழுத்திட்டிருக்கின்றன எனத் தெரிகின்றது.

இந்த 22 நாடுகள் மற்றும் பிரேரணையை முன்மொழியும் பிரதான ஐந்து நாடுகள் ஆகிய 27 இலும் ஆக பத்து நாடுகளே இப்போது ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் அங்கத்துவம் வகிக்கும் மொத்தம் 47 நாடுகளில் அடங்குகின்றன.

அங்கத்துவ நாடுகளில் நான்கில் ஒன்றிற்கும் குறைவான நாடுகளே இந்தப் பிரேரணைக்கு அனுசரணைக்கும்இணைஅனுசரணைக்கும் ஆதரவாக ஒப்பமிட்டிருந்தாலும் இந்தப் பிரேரணை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஆய்வுக்கு வரும் போது அதன் மீது வாக்கெடுப்பு நடத்த இலங்கை கோராது என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் காரணமாக இந்தப் பிரேரணை விவாதத்தின் பின்னர் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் என்று கருதப்படுகின்றது.

பிரேரணை இவ்வாரம் திட்டமிடப்பட்டபடி நிறைவேற்றப்பட்டால், இலங்கைக்கு இந்த விடயத்தில் மேலும் மூச்சு விட இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் கிடைக்கும். அதேநேரம் இலங்கையில் மீள் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகள் விவகாரம் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஜெனிவாவின் கூர்மையான அவதானிப்புக்குள் உட்பட்டு இருக்கும் நிலைமை தொடர்ந்து நீடிக்கும்.

இலங்கையில் இடம் இடம் பெற்றவை எனக் கருதப்படும் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் என்பவை தொடர்பான சாட்சியங்கள், சான்றுகள், ஆவணங்கள், ஆதாரங்கள் போன்றவற்றைப் பதிந்து, சேகரித்து, பாதுகாக்கும் நடவடிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னெடுப்பதற்கான அதிகாரத்தையும் இப்போதைய இந்தப் பிரேரணை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கி நிற்கின்றது என்பதும் முக்கியமான விடயம்.

பாதிக்கப்பட்ட தமிழர்கள் தரப்பைப் பொறுத்தவரை இது ஒன்று மட்டுமே இந்தப் பிரேரணை மூலம் இலங்கைக்கு இரண்டு வருடங்கள் கால நீடிப்பு வழங்குவதால் கிடைக்கப் போகும் ஆறுதலாக இருக்கும். அவ்வளவே.

# சட்டவிரோத கடற்றொழிலை அங்கீகரித்து வடக்கு மீனவர்களைக் கருவறுக்கிறது அரசு

## வட மாகாணக் கடற்றொழிலாளர்கள் வேதனை
## அமைச்சர் சந்திரசேகர் மீது சரமாரி குற்றச்சாட்டு



“சட்டவிரோத கடற்றொழில்களுக்கு எதிராக முன்னர் எம்முடன் இணைந்து போராடிய அமைச்சர் இ.சந்திரசேகர், பதவிக்கு வந்த பின்னர் அத்தனை சட்டவிரோத கடற்றொழில்களையும் அங்கீகரித்து எம்மைக் கருவறுக்கின்றார்.”

– இவ்வாறு வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:–

“சட்டவிரோத கடற்றொழில்களைக் கட்டுப்படுத்துவதற்கு எத்தனை சட்டங்கள் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டாலும் வடக்குக் கடற்றொழிலாளர்களை மாற்றான்தாய் மனப்பான்மையுடனேயே அரசுகள் அணுகுகின்றன. இது வேதனையான விடயம்.

சீன கடலட்டைப் பண்ணைகளால் வடமாகாண மீனவர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். இந்தப் பண்ணைகளுக்கு எதிராகக் கடந்த ஆட்சியில் நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோது, தற்போதைய கடற்றொழில் அமைச்சர் எங்களின் போராட்டத்தில் தோளுடன் தோள் நின்றார். அவரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனும் இந்தப் போராட்டங்களில் ஆற்றிய பங்களிப்புப் பெரியது. ஆனால், பதவிக்கு வந்த பின்னர் இந்த விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக அவர்கள் மௌனம் காக்கின்றனர்.

அன்று பிழையாகத் தெரிந்த சீனக் கடலட்டைப் பண்ணைகள் இன்று சரியாகப் போய்விட்டதா? என்று அவர்களிடம் கேட்கின்றோம்.

அமைச்சர் சந்திரசேகர் பதவிக்கு வந்த பின்னர் அத்தனை சட்டவிரோத கடற்றொழில்களையும் கண்டும் காணாமல் இருக்கின்றார். இது வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை கருவறுக்கும் செயல் என்பதை சுட்டிக் காட்டுகின்றோம்.

வடக்கு மாகாணத்தில் கடல்சார் பிரதான ஏற்றுமதிப் பொருளாதாரமாக நீலக்கால்நண்டுகளேகாணப்படுகின்றன. அவற்றின் பிரதான சந்தையாக அமெரிக்கா உள்ளது. இந்த நிலையில், ஜனவரி மாதத்தில் இருந்து நீலக்கால் நண்டுகளை இறக்குமதி செய்வதை அமெரிக்கா நிறுத்தவுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. இதனால், வடக்கு மாகாணத்தில் 5 தொழிற்சாலைகள் பாதிக்கப்படும். அத்துடன், மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பெண் தலைமைக் குடும்பங்களும், ஆறாயிரம் மீனவக் குடும்பங்களும் பெரும் பொருளாதார அழிவை எதிர்நோக்கவுள்ளன.

நீலக்கால் நண்டுகளின் ஏற்றுமதியில் 95 வீதமானவை வடக்கைச் சார்ந்தே உள்ளன. 5 வீதமானவையே புத்தளம் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பகுதிகளைச் சார்ந்தவை. எனவே, அரசு மாற்றான்தாய் மனப்பான்மையுடன் செயற்படாமல், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வொன்றை விரைவாகத் தேட வேண்டும்.” – என்றார்.

# யாழ். போதனா வைத்தியசாலையில் குருதித் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஓ ‘பொசிடிவ்’ குருதி வகைகளுக்குத் தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

எனவே, ஓ ‘பொசிடிவ்’ வகை குருதி உடையவர்கள், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேரடியாக வருகை தந்து குருதிக் கொடையில் ஈடுபடுமாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# பதுளை மாவட்டத்துக்கு மண்சரிவு எச்சரிக்கை!



நாட்டின் வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற நிலைமை காரணமாக பதுளை மாவட்டத்தில் கடந்த இரு நாட்களாகப் பலத்த மழை பெய்து வருகின்றது.

நேற்று சனிக்கிழமை பெய்த கடும் மழையின் காரணமாக பசறை பகுதியில் 137.4 மில்லிலீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன், பெல்காதன்ன பகுதியில் 134 மில்லிலீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இதன் காரணமாக ஆறுகள், ஓடைகள் பெருக்கெடுத்ததுடன் பசறை வீதியின் பல பகுதிகள் மேக மூட்டத்துடன் காணப்பட்டன.

கடும் மழை காரணமாக பதுளை மாவட்டத்தின் எல்ல, ஹாலிஎல, பதுளை, பசறை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், மொனராகலை மாவட்டத்தின் பிபிலை பிரதேச செயலாளர் பிரிவுக்கும் முதற்கட்ட மண்சரிவு அனர்த்த அபாய எச்சரிக்கையை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் விடுத்துள்ளது.

# வடமாகாண கல்வி மேம்பாடு தொடர்பில் மாநாடு ஒன்று நடத்தப்படுதல் வேண்டும்

## சச்சிதானந்தன் வேண்டுகோள்

(த.சுபேசன் )

வடமாகாண கல்வி மேம்பாடு தொடர்பில் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி மாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம் என இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தினுடைய காப்பாளர் நடராசா சச்சிதானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கில் பெரும்பாலான முன்பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு ஆறாயிரம் தொடக்கம் பத்தாயிரம் ரூபா வரையிலே கொடுப்பனவு கிடைக்கின்றது. அவர்களுக்கு விடுமுறையோ அல்லது ஓய்வூதியமோ கிடையாது.

அத்துடன் முன்பள்ளி ஆசிரியர்களில் பெரும்பாலானவர்களுக்கு கல்வி போதிப்பதற்கு உரிய தராதரம் கிடையாது. தராதரம் இல்லாத ஆசிரியர்களிடம் கற்பதால் பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படும்.

அதனடிப்படையில் கல்வி அபிவிருத்திக் குழுமம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழகங்கள் ஊடாக டிப்ளோமா பயிற்சியை வழங்கி வருகின்றது.அதற்கான செலவை கல்வி அபிவிருத்திக் குழுமம் பொறுப்பேற்றுள்ளது.



வடக்கு மாகாணத்தில் 3200 முன்பள்ளி ஆசிரியர்கள் காணப்படுகின்ற போதிலும் டிப்ளோமா கற்கைக்காக சில நூறு ஆசிரியர்களையே ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தில் பயிற்சி வழங்க முடிகின்றது.

வடக்கில் முன்பள்ளி கல்வியை சிறப்பாக முன்னெடுக்க சிறந்த முன்பள்ளிகள், ஆசிரியர்கள், அதேநேரம் முன்பள்ளிச் சிறார்களும் தேவைப்படுகின்றனர்.

வடக்கு மாகாண கல்வி தொடர்பில் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி அவசரமாக மாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டும்.

சி.வி விக்கினேஸ்வரன் முதலமைச்சராக இருந்த போது, வடக்கில் கல்வி தொடர்பான மாநாடு நடத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தேன். அதன்பின்னர் அவர் பிரித்தானியா வந்த போதும் அது தொடர்பில் ஞாபகப்படுத்தினேன். ஆனால் அவர் அது தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

வடக்கு மாகாணத்துக்குத் தற்போது கல்வி மாத்திரமே அத்தியவசியமானதாகக் காணப்படுகின்றது.

எனவே தற்போதைய அரசு மற்றும் வடக்கில் உள்ள மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகள் மிக விரைவாக வடக்கு மாகாண கல்வி முன்னேற்றம் தொடர்பில் மாநாடு ஒன்றை நடத்தி வடக்கு மாகாண கல்வியையும் முன்பள்ளிக் கல்வியையும் முன்னேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.– என்றார்.





# ஆய்வார்வலர் நவநாயக மூர்த்தியின் இராமாயண மகாபாரத நிகழ்வுகளின் கண்ணோட்டம் நூல் வெளியீடு!

(வடிவேல் டினேஸ் )

அக்கரைப்பற்று பிரதேசத்தின் வரலாற்று ஆய்வார்வலர், வரலாற்று பொக்கிஷம் என்று அழைக்கப்படும் நா.நவநாயகமூர்த்தி உலகுக்குத் தரும் 18 ஆவது படைப்பான “இராமாயண மஹாபாரத நிகழ்வுகளின் உண்மைச் சம்பவங்கள்” (வரலாற்று கண்ணோட்டம்) நூல் நேற்று (04) பனங்காடு பாரதி பவனத்தில் வெளியிடப்பட்டது.

இலங்கையில் காணப்படும் பிரபலயமான வரலாற்று ஆய்வாளர்களில் இவரும் ஒருவராவார்.

1993 ஆம் அண்டு நவநாயக மூர்த்தி அவர்களால் வெளியிடப்பட தமிழரும் முருக வழிபாடும் என் தனது முதல் நூல் மூலம் பிரபல்யமானவர் இவர்.

1993 ஆம் ஆண்டு முதல் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக தமது ஆய்வுப் பணியினை ஈழத்தில் தொடர்ந்த அவர் 2025 இன்று வரை சுமார் 18 வரலாற்று தொகுப்புக்களை உயிருள்ளவையாக படைத்துள்ளார்.

இன்றைய நூல் வெளியீட்டு விழாவில் ஒய்வு பெற்ற அதிபர் க.இரத்தினவேல் ஒய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் குணாளன் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக வரலாற்று முதுநிலை விரிவுரையாளர் அனுசூயா சேனாதிராஜா மற்றும் கலாவியியலாளர்கள் ஆலையடிவேம்பு பிரதேச கலாச்சார உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு வீடற்றவர்களுக்கு வீடமைத்து வழங்கல்

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலையில் உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு, யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த வீடற்ற நபர்களுக்கு, வீடுகள் வழங்கப்பட்டன.

அதற்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நிறைவடைந்ததும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை பிரதி அமைச்சர் ரீ.பீ. சரத், பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட சில வீடுகளுக்கு விஜயம் மேற்கொண்டார்.

பட்டினமும் சூழலும், மூதூர், கிண்ணியா, தம்பலகாமம் ஆகிய பிரதேச செயலகப் பிரிவிகளில் தெரிவு செய்யப்பட்ட சில வீடுகளுக்கு பிரதி அமைச்சர் விஜயம் மேற்கொண்டு வீடுகளை திறந்து வைத்ததோடு, வீட்டு வளாகத்தில் பயன்தரு மரக்கன்றுகளையும் நட்டு வைத்தார்.





# மன்னார் மூர்வீதியில் பராமரிப்பு இன்றி காணப்படும் காணிகளால் பெரும் பாதிப்பு

## மன்னார் நகர சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிப்பு



மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் மூர்வீதி கிராமத்தில் பல்வேறு வெற்றுக்காணிகள் காணப்படுகின்றன. குறித்த காணிகள் அனைத்தும் மன்னார் நகர சபை பிரிவில் காணப்படுகின்றன.

எனினும் குறித்த வெற்றுக் காணிகளில் சில காணிகள் உரிமையாளர்களால் உரிய முறையில் பராமறிப்பின்றி காணப்படுகின்றன. குறித்த காணிகளில் அடர்ந்த காடுகள் மற்றும் பற்றைகள் காணப்படுகின்றமையால் விஷ ஜந்துக்களின் நடமாட்டம் காணப்படுகிறது என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளமையால் நுளம்பின் பெருக்கம் அதிகரிக்கும் என தெரிவித்துள்ளனர்.

எனவே குறித்த பகுதியில் பராமரிப்பின்றி காணப்படும் காணிகளின் உரிமையாளர்களுக்கு எதிராக மன்னார் நகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# தலைமன்னார் - தனுஷ்கோடி இடையில் பாக் ஜலசந்தியை நீந்திக் கடந்த முழங்காலுக்குக் கீழே பாதிக்கப்பட்ட 12 வயது மாற்றுத்திறனாளி சிறுவன்

**(எஸ்.ஆர்.லெம்பேட்)**

இயலாமைக்கும் சாதனைக்கும் உள்ள தூரத்தை நீந்தி கடந்து சாதனை படைக்க வேண்டும் என்ற லட்சியத்துடன் முழங்காலுக்கு கீழே பாதிக்கப்பட்ட 12 வயது மாற்றுத்திறனாளி சிறுவன் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை 9 மணி 11 நிமிடத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளார்.

பாக் ஜலசந்தி கடல் பகுதி தமிழகத்தையும் இலங்கையையும் பிரிக்கும் நீரிணை ஆகும். ராமேஸ்வரம் தீவும், அதை தொடர்ந்துள்ள 13 மணல் தீடைகளும், பாக் ஜலசந்தி கடற்பகுதியை மன்னார் வளைகுடாவில் இருந்தும் பிரிக்கின்றன. தமிழகத்திலேயே மிகவும் ஆழம் குறைந்த அதே சமயம் பாறைகளும் ஆபத்தான ஜெல்லி மீன்கள் நிறைந்த கடல் பகுதி இதுவாகும் .

இதுவரை 30 க்கும் மேற்பட்டோர் பாக் ஜலசந்தியை தனியாக நீந்தி கடந்து சாதனை புரிந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் இலங்கையின் தலைமன்னாரிலிருந்து இந்தியாவின் தனுஷ்கோடிக்கு அல்லது தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னாருக்கு நீந்திச் சென்றவர்கள். இது தவிர மேலும் சிலர் குழுவாக ரிலே மற்றும் மாரத்தான் முறையில் பாக் ஜலசந்தி கடலை நீந்தி கடந்துள்ளனர்.

இந்நிலையில் சென்னை முகப்பேர் மேற்கு பகுதியைச் சேர்ந்த பெரியார் செல்வன், பத்மபிரியா தம்பதியினரின் 12 வயதான புவி ஆற்றல் என்ற சிறுவன் முகப்பேர் பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் எட்டாம் வகுப்பு பயின்று வருகிறார்.

முழங்காலுக்கு கீழே பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி சிறுவன் புவி ஆற்றல் 2022 ஆண்டு சென்னை, செனாய் நகரில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வழிகாட்டுதலோடு தன்னுடைய நீச்சல் பயற்சியை தொடங்கினார். 2024 ஆண்டு

தொடர்ச்சி▼















# தலைமன்னார் – தனுஷ்கோடி இடையில் பாக் ஜலசந்தியை நீந்திக் கடந்த முழங்காலுக்குக் கீழே பாதிக்கப்பட்ட 12 வயது மாற்றுத்திறனாளி சிறுவன்

தொடர்ச்சி▲

கோவாவில் நடைபெற்ற தேசிய அளவிலான நீச்சல் போட்டிகளில் தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வென்றுள்ளார்.

தலைமன்னார் இருந்து தனுஷ்கோடிக்கு நீந்தி கடப்பதற்காக இந்திய-இலங்கை இரு நாட்டு அரசிடம் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தார்.

அனுமதி கிடைத்த நிலையில், நீந்துவதற்கு ஊனம் தடையல்ல என்பதை வலியுறுத்துவதற்காக இலங்கை-தலைமன்னாரில் இருந்து இந்தியாவில் உள்ள தனுஷ்கோடி வரையிலான பாக்கு நீரிணை கடலை நீந்தி கடப்பதற்காக, சிறுவன் புவி ஆற்றல் ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து வெள்ளிக்கிழமை மதியம் ஒரு விசைப்படகு மற்றும் நாட்டுப் படகில் மற்றும் அவரது பெற்றோர், பயிற்சியாளர், மருத்துவர் மற்றும் மீனவர்கள் உள்ளிட்ட 20 பேர் கொண்ட குழுவினருடன் தலைமன்னாருக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இலங்கை தலைமன்னாரில் இருந்து நேற்று சனிக்கிழமை அதிகாலை 2.45க்கு கடலில் குதித்து நீந்த தொடங்கி மதியம் 12 மணி அளவில் தனுஷ்கோடி வந்தடைந்தனர். இவர் தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரை 9 மணி நேரம் 11 நிமிடத்தில் நீந்தி கடந்தார்.

அரிச்சல்முனை வந்தடைந்த சிறுவன் புவி ஆற்றல் அவரது தாய் கண்ணீர் மல்க முத்தமிட்டு வரவேற்றார். அதனை தொடர்ந்து சுங்கத்துறை கண்காணிப்பாளர், மரைன் பொலிஸார் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இதற்கு முன்னதாக தலைமன்னார், தனுஷ்கோடி இடையிலான பாக்கு நீரிணைக் கடற்பகுதியை 20.03.2022 அன்று மும்பையைச் சேர்ந்த ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட சிறுமி ஜியா ராய் தனது 13 வயதில் நீந்திக் கடந்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.













# அடம்பன் புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞரை காணவில்லை என முறைப்பாடு


(மன்னார் நிருபர்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த சங்கர் அருண் (வயது-24) என்ற இளைஞர் கடந்த 30 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார் என்ச் அவரது தந்தை அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த இளைஞன் கடந்த 30 ஆம் திகதி தனது வீட்டில் இருந்து அடம்பன் பகுதிக்குச் சென்று வருவதாக கூறிச் சென்ற நிலையிலே இதுவரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மகன் வீடு திரும்பாத நிலையில் அவரது தந்தை அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த இளைஞன் குறித்து தகவல் தெரிந்தவர்கள் 076-712 1294 மற்றும் 077-0631135 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொண்டு தெரிவிக்குமாறு குடும்பத்தார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.






# போதைப் பொருளுக்கு எதிராக மஸ்கெலியா நகரில் விழிப்புணர்வு

**(மஸ்கெலியா)**

போதைப் பொருளுக்கு எதிராக மஸ்கெலியா சமன் எலிய மத்திய வித்தியாலய மாணவ, மாணவிகள் மஸ்கெலியா நகரில் வீதி நாடகம் ஒன்றை நடத்தினர். இன்று (05) மதியம் மஸ்கெலியா நகரில் இந்த நாடகம் இடம்பெற்றது.

பாடசாலை மாணவ மாணவிகள் போதைப் பொருள் பாவனை புகைத்தல், மதுபானம் அருந்துதல், வெற்றிலை பாவனைக்கு எதிராக இந்த வீதி நாடகம் இடம்பெற்றது.

இவ்வாறு இன்று மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் பல்வேறு இடங்களில் போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் விபரீதம் அதனால் ஏற்படும் குடும்ப தகராறு பற்றி வீதி நாடகத்தில் எடுத்துக் கூறினர்.








# பாண்டிருப்பில் சிறப்பாக நடைபெற்ற வள்ளலாரின் 202 ஆவது அவதார விழா

(வி.ரி.சகாதேவராஜா)

அருட்பிரகாச வள்ளலாரின் 202 ஆவது அவதார நாளான இன்று (05) ஞாயிற்றுக்கிழமை பாண்டிருப்பு வள்ளலார் வல்லவர் உள்ளொளி நேசிப்பு மைய ஏற்பாட்டில் விசேட ஆன்மீக நிகழ்வுகள் இன்று நடைபெற்றது.

வள்ளலார் வல்லவர் உள்ளொளி நேசிப்பு நிலையத்தின் ஸ்தாபகர் வல்லவர் தவத்திரு புண்ணிய மலர் அம்மா தலைமையில் நடைபெற்ற இந்த அவதார தின விழாவில் அருட்பெருஞ்ஜோதி கீதம், இசைத்தல். அணையா விளக்கு ஜோதி சுடர் எற்றுதல், தியானம், யோகாசனம், வள்ளலாரின் போதனைகள், பல நிகழ்வுகள் நடைபெற்றன.

வள்ளலார் வல்லவர் உள்ளொளி நேசிப்பு நிலையத்தின் ஆன்மீக இணைப்பாளர் ந.சௌவியதாசன் ஏற்பாட்டில் ஆன்மீக ஆர்வலர்களான எஸ்.சிசுபாலன், ம.லக்குணம், வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து அருட்பெரும்ஜோதி ஆண்டவரின் அடியார்கள். இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இறுதியாக அணைய ாஅடுப்பின் அன்னதானம் வழங்கப்பட்டது.







# கல்முனை - அக்கரைப்பற்று வீதியில் ஓட்டோ விபத்தில் ஒருவர் காயம்!





(எம்.எவ்.றிபாஸ்)

கல்முனை – அக்கரைப்பற்று வீதியில் அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டை பகுதியில் தனியார் பஸ்ஸூம், ஓட்டோவும் விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்தச் சம்பவம் இன்று (05) மதியம் இடம்பெற்றுள்ள நிலையில் ஓட்டோ சாரதி காயங்களுக்குள்ளாகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.




# சமூக ஊடக பிரகடனம் 2.0 விழிப்புணர்வுத் திட்டம்

**(மட்டக்களப்பு நிருபர்)**

சமூக ஊடக பிரகடனம் 2.0 சமூக ஊடக பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு, ஜனநாயக மதிப்புகள் தொடர்புடைய சிக்கல்கள் தொடர்பான விழிப்புணர்வு உருவாக்கும் திட்டம் மட்டக்களப்பு - கல்லடி தனியார் விடுதியில் நேற்று சனிக்கிழமை (04) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சமூக ஊடக பிரகடனம் 2.0 மற்றும் கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தலைவர் இலட்சுமணன் தேவஅதிரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ஞானமுத்து சிறிநேசன், வைத்தியர் இளையதம்பி சிறிநாத், தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, ஊடகவியலாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், பல்கலைக் கழக மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சமூக ஊடகப் பிரகடனத்தின் 2.0 பிரதிகள் நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்களது உரைகளும் நடைபெற்றன.

சமூக ஊடக பாதுகாப்பு மற்றும் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன, அதன் வாய்ப்புகள் மற்றும் அவற்றை சவால்களுடன் ஆராய்தல், செயற்கை நுண்ணறிவு உருவாக்கமானது ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பற்றி விவாதித்தல், புதிய தொழில்நுட்ப போக்குகளுக்கு மத்தியில் சமூக பொறுப்பு மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பாக தெழிவூட்டல்களை வழங்குவதற்காக இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தற்போது, இணையமும் சமூக ஊடகங்களும் சமூகத்தில் பெருகிய முறையில் சக்திவாய்ந்த தளங்களாக மாறிவிட்டன. அவை ஜனநாயகத்தை வலுப்படுத்தும் சக்தியாகச் செயல்பட முடியும். ஆனால் சில சமயங்களில் அவை மோசடி, தவறான தகவல், வெறுப்புப் பிரசாரம் மற்றும் நீதித்துறைக்கு புறம்பான அடக்குமுறைக்கும் பயன்படுத்தப்படலாம். இந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு சமூக ஊடக பிரகடனம் 2.0 புதிய வழிகாட்டுதல்களை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் ஊடகம், நெறிமுறை




கள் வெகுஜன ஊடகங்கள் பொறுப்புடன் பயன்படுத்தல் மற்றும் அரசின் புதிய ஊடக கொள்கைகள் தொடர்பாக இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் துமிந்த சம்பத் தெழிவுபடுத்தினார்.

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம், சமூக ஊடகப் பிரகடனம் 2.0, செயற்கை நுண்ணறிவு உருவாக்கம் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வாளர் சம்பத் சமரகோன் தெழிவுபடுத்தினார்.

சமூக ஊடகப் பிரகடனமானது 2019 ஆம் ஆண்டு கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டு அதன் இரண்டாவது மேம்படுத்தப்பட்ட பிரகடனம் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# முல்லைத்தீவில் சந்தைப்படுத்தலை வினைத்திறனாக்கும் கலந்துரையாடல்

## ரவிகரன் எம்.பியின் ஏற்பாட்டில் இடம்பெற்றது

(பா. சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் இடர்பாடுகள் காணப்படுகின்றன என்று விவசாயிகள் பலராலும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதிலுள்ள இடர்பாடுகளைக் களைந்து, சந்தைப்படுத்தலை வினைத்திறனாக்குவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் (03) வடமாகாண விவசாயப் பணிப்பாளர் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திற்குரிய மாகாணபிரதி விவசாயப் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் போதனாசிரியர்கள் ஆகியோருடனே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வாறு கலந்துரையாடலை நடத்தியிருந்தார்.

குறித்த சந்திப்பில் தற்போது முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் தமது விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் எதிர்நோக்குகின்ற சவால்கள் தொடர்பில் வடமாகாணப் விவசாயப் பணிப்பாளர் மற்றும் பிரதி மாகாண விவசாப் பணிப்பாளர், விவசாயப் போதனாசிரியர்கள் ஆகியோரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்து கொண்டார்.

தொடர்ந்து அந்த சவால்களைக் களைந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதை இலகுவாக்குவதுதொடர்பான ஆலோசனைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

அந்தவகையில் இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைவாக முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தலை வினைத்திறனாக்குவது தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# சுவாமி விபுலானந்த அடிகளாரின் நினைவு விழா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் பிரதேச ஆலயங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுடன் இணைந்து ஏற்பாடு செய்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் நினைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை (05) மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலாளர் உ. உதயஸ்ரீதர் தலைமையில் கோட்டை கல்லாறு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கோட்டைக்கல்லாறு கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் ஆரம்பமான பண்பாட்டு ஊர்வலமானது, ஊர் வீதிகளுடாக கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தை சென்றடைந்தது. பிரதேச செயலாளரால் சுவாமி விபுலானந்தரின் திருவுருவத்துக்கு மாலை அணிவித்தல் மற்றும் பூசை நிகழ்வுடன் பிரதான நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதன்போது அறநெறிப்பாடசாலை மாணவர்களால் சுவாமி விபுலாநந்தர் தொடர்பான கதாப்பிரசங்கம், பேச்சு, பாடல், நாடகம் மற்றும் வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் கோட்டைக்கல்லாறு ஆலயங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரதேச அறநெறிப்பாடசாலைகளின் ஆசிரியர்கள்மற்றும் மாணவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.















# சிறுவர் தினத்தில் நடத்தப்பட்ட தரப்படுத்தல் கல்லடி ஹறி இல்லம் முதலிடம் பெற்றது!

(பழுவூரான்)

2025 சர்வதேச சிறுவர் தினத்தை கிழக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் அண்மையில் திருகோணமலையில் கொண்டாடியது.

இதன்போது சிறுவர் இல்லத் தரப்படுத்தலில் கல்லடி ஹறி சிறுவர் இல்லம் முதலிடத்தைப் பெற்றமைக்காக கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரட்ணசேகர மற்றும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.டிசாநாயக்காடிசாநாயக்கா ஆகியோரால் வெற்றிக் கிண்ணம் மற்றும் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டன. இந்தத் தரப்படுத்தலில் 49 அறநெறிப் பாடசாலைகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# த.வெ.க. தலைவர் விஜய் பிரசார வாகனத்தை பறிமுதல் செய்வதற்கான நடவடிக்கை தீவிரம்



த.வெ.க. தலைவர் விஜய்யின் பிரச்சார வாகனத்தை பறிமுதல் செய்யுமாறு சிறப்பு புலனாய்வுக் குழுவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், அதற்கான நடவடிக்கையில் பொலிஸார் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

கரூரில் கடந்த செப்ரெம்பர் 27 ஆம் திகதி த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். இதை தொடர்ந்து, அரசியல் கட்சிகளின் 'ரோடு ஷோ' நிகழ்வுகள் மற்றும் சாலை பிரச்சாரத்துக்கு அனுமதி வழங்க தடை விதிக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தினேஷ் என்பவர் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி என்.செந்தில்குமார் கடந்த 3 ஆம் திகதி பிறப்பித்த உத்தரவில்,

"கரூரில் பிரச்சாரக் கூட்டத்தின் போது நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தபோது, சம்பவ இடத்தில் இருந்த கட்சித் தலை வரும், பிற நிர்வாகிகளும் தங்களுக்கும், நடந்த சம்பவத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லாததுபோல நடந்துகொண்டுள்ளனர். நெரிசலில் சிக்கியவர்களுக்கோ, தங்களது ஆதரவாளர்களுக்கோ அவர்கள் எந்த உதவியும் செய்யவில்லை. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கலோ, ஆறுதலோ தெரிவிக்கவில்லை. பொறுப்பற்ற முறையில் அப்படியே விட்டுவிட்டு அங்கிருந்து நழுவிச் சென்றது கடும் கண்டனத்துக்குரியது.

குறைந்தபட்சம் தன்னை பார்க்க வந்தவர்கள் பரிதாபமாக உயிரிழந்த துயரத்துக்கு விஜய் சமூக வலைதளத்திலாவது உடனடியாக தனது அனுதாபம், வருத்தத்தை கட்சி சார்பில் தெரிவித்திருக்கலாம். அவர்களது இந்த பொறுப்பற்ற செயல்பாடு, மனித உயிர்களை குறைவாக மதிப்பிடும் ஆபத்தான அரசியல் பண்பாட்டை வெளிப்படுத்துகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரிக்க வடக்கு மண்டல ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைக்கிறேன். விஜய் பயணம் செய்த பிரச்சார வாகனத்தின் உள்ளே, வெளியே மற்றும் சம்பவ இடத்தில் இருந்த அனைத்து கண்காணிப்பு கேமரா காட்சிகளையும் கைப்பற்றி விசாரணையை இந்த குழு உடனே தொடங்க வேண்டும். சம்பவத்தில் தொடர்புடைய விஜய்யின் பிரச்சார வாகனத்தையும் பறிமுதல் செய்து விசாரணை நடத்த வேண்டும்." என்று உத்தரவில் கூறியிருந்தார்.

இதையடுத்து, விஜய்யின் பிரச்சார வாகனத்தை பறிமுதல் செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் தீவிரம் காட்டி வருகின்றனர். சென்னை பனையூரில் நிறுத்தப்பட்டுள்ள அந்த வாகனம் எந்த நேரத்திலும் பறிமுதல் செய்யப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அதிநவீன கப்பல் இந்திய கடலோர காவல் படைக்கு அர்ப்பணிப்பு




உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அதிநவீன ரோந்துக் கப்பல், காரைக்காலில் நேற்று நடைபெற்ற விழாவில் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

இந்திய கடலோர காவல் படையின் காரைக்கால் மையம் நிரவி பகுதியில் செயல்பட்டு வருகிறது. காரைக்கால் மாவட்டம் வாஞ்சூரில்

உள்ள அதானி கப்பல் துறைமுகத்தில் உள்ள தளத்தில் இருந்து கடலோர காவல் படைக்குச் சொந்தமான ரோந்துக் கப்பல்கள், படகுகள் இயக்கப்படுகின்றன.

இந்நிலையில், இந்த மையத்தின் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில், கோவா கப்பல் கட்டும் தளத்தில் புதிதாக தயாரிக்கப்பட்ட 'அக்ஷர்' என்று பெயரிடப்பட்ட அதிநவீன ரோந்துக் கப்பலை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் விழா காரைக்கால் துறைமுக வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

மத்திய பாதுகாப்புத் துறை கூடுதல் செயலர் தீப்தி மொஹில் சாவ்லா சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு, கப்பலை இயக்கி வைத்து உரையாற்றுகையில்,

"இந்திய கடலோர காவல் படையின் மேம்பாட்டுக்கு அக்ஷர் ரோந்துக் கப்பல் பெரிதும் உதவும். 60 சதவீதம் உள்நாட்டுப் பொருள்கள், தளவாடங்களை பயன்படுத்தி இது தயாரிக்கப்பட்டுள்ளது. நாட்டில் 11 ஆயிரம் கிலோ மீற்றர் கடலோர பாதுகாப்பில், கடலோர காவல் படையின் பங்களிப்பு அளப்பரியது. குறிப்பாக, மீனவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல், கடல்வழி கடத்தலை தடுத்தல், ஊடுருவலை தடுத்தல், கடல் பகுதி சூழல் பாதுகாப்பு, மீட்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றில் கடலோர காவல் படையின் செயல்பாடுகள் பாராட்டுக்குரியவை." என்று தெரிவித்தார்.

இந்த விழாவில், கடலோர காவல் படை கூடுதல் இயக்குநர் ஜெனரல் கொமாண்டர் டோனி மைக்கேல், காரைக்கால் மைய கமாண்டன்ட் சவுமய் சந்தோலா, புதிய ரோந்துக் கப்பல் கொமாண்டன்ட் சுபேந்து சக்கரபோர்த்தி, காரைக்கால் ஆட்சியர் ரவி பிரகாஷ், மாவட்ட எஸ்.எஸ்.பி. லட்சுமி சவுஜன்யா, நாகை எஸ்.பி. செல்வகுமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# கரூர் விவகாரத்தில் ஸ்டாலின் பொறுப்புடன் செயற்படுகிறார்

## டி.டி.வி. தினகரன் கருத்து



கரூர் விவகாரத்தில் முதல்வர் ஸ்டாலின் பொறுப்புடன் செயற்படுகிறார் என்று அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் டி.டி.வி. தினகரன் செய்தியாளர்களிடம் நேற்று கருத்து தெரிவிக்கையில்,

“கரூர் விவகாரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பொறுப்புடனும், நிதானமாகவும் செயல்பட்டு வருகிறார். யாரையும் கைது செய்ய வேண்டும் என்ற நோக்கம் முதல்வருக்கு இல்லை என்று தெரிகிறது. 41 பேர் அநியாயமாக உயிரிழந்துள்ளனர். இது தொடர்பாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, கைது செய்ய வேண்டிய அவசியமும் அரசுக்கு உள்ளது. ஆனால், விஜய் கைது செய்யப்படவில்லை.

நான் அரசுக்கு ஆதரவாகப் பேசவில்லை. நடுநிலையாகப் பார்க்கும்போது, எல்லாம் சரியாக தான் நடக்கிறது. த.வெ.கவும் திட்டமிட்டு செய்யவில்லை. நிர்வாகிகளுக்கு அனுபவம் குறைவு என்பதால் விபத்து நடந்துள்ளது.

விஜய் தார்மிகப் பொறுப்பு ஏற்றிருந்தால், நீதிமன்றம் கண்டனம் தெரிவித்திருக்காது. ஆனால், தங்களின் மீது பழி வந்துவிடும் என ஆலோசகர்களோ, வழக்கறிஞர்களோ கூறியதால், விஜய் அமைதியாக இருக்கிறார் என்று நான் கருதுகிறேன். இவ்விவகாரத்தில் பல தலைவர்கள் நிதானமாக பேசினார்கள். ஆனால், எம்.பி.க்கள் குழு அமைத்து, பழனிசாமிக்கு நிகராக பா.ஜ.க. அரசியல் செய்வது வருத்தம் அளிக்கிறது. தூத்துக்குடி சம்பவத்தின்போது இதுபோன்று எந்தக் குழுவும் வரவில்லை.

இதை வருங்காலத்துக்கு ஒரு பாடமாக எடுத்துக்கொள்ள வேண்டும். விஜய் அரசியலுக்குப் புதியவர். அவரைச் சுற்றி இருப்பவர்களும் அரசியல் அனுபவம் இல்லாதவர்களாக இருப்பதால், இதுபோன்ற தவறு ஏற்பட்டுள்ளது.” என்று தெரிவித்துள்ளார்.



# ஜப்பானில் நிலநடுக்கம்!

ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலநடுக்கமானது நேற்றிரவு ஜப்பானின் ஹோன்சு நகரின் கிழக்கு கடற்கரையோரம் அருகே ஏற்பட்டுள்ளது.

இது ரிக்டர் அளவுகோலில் 6.0 ஆக பதிவாகி உள்ளதாக ஜேர்மன் புவி அறிவியல் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இந் நிலநடுக்கம் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் பசிபிக் நெருப்பு வளையத்தில் எரிமலை மண்டலத்தில் அமைந்துள்ளது. இதனால், அடிக்கடி லேசான நிலஅதிர்வுகள் ஏற்படும் நாடாக அறியப்படுகிறது.

பேரழிவை ஏற்படுத்தும் நிலநடுக்கங்கள், சுனாமிகள் போன்றவை பல முறை ஏற்பட்டு இருக்கின்றன.






# குண்டுவீச்சை நிறுத்துமாறு ட்ரம்ப் கூறிய பிறகு இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 6 பேர் மரணம்

இஸ்ரேல் - ஹமாஸ் போரை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 20 அம்ச அமைதி திட்டத்தை அறிவித்தார். இதை ஏற்பதாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அறிவித்தார். எனினும் ஹமாஸ் அமைதி காத்ததால் அதற்கு ட்ரம்ப் 3 நாள் கெடு விதித்தார்.

இந்நிலையில் அமைதிக்கு ஹமாஸ் தயாராக இருப்பதாகவும் பணயக் கைதிகளை விடுவிக்க ஒப்புக்கொண்டுள்ளதாகவும் பிற நிபந்தனைகள் சிலவற்றை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் ட்ரம்ப் அறிவித்தார். மேலும் காசா மீது குண்டுவீச்சை நிறுத்துமாறு இஸ்ரேலை கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில் ட்ரம்பின் இந்த அறிவுரைக்கு அடுத்த சில மணி நேரத்தில் காசாவில் இஸ்ரேலிய துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் கொல்லப்பட்டனர் என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக ஹமாஸின் ஒப்புதலை தொடர்ந்து இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகுவின் அலுவலகம் நேற்று அதிகாலை, "இஸ்ரேலிய பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கான ட்ரம்ப் அமைதி திட்டத்தின் முதல் கட்டத்தை செயல்படுத்த இஸ்ரேல் தயாராகி வருகிறது" என அறிவித்தது.

மேலும் காசாவில் தாக்குதலை குறைக்க இராணுவத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

# 50 ஆண்டுகளுக்கு பின்னர் மகளை கண்டு பிடித்த தந்தை

## இங்கிலாந்தில் நெகிழ்ச்சி சம்பவம்




இங்கிலாந்தில் 50 ஆண்டுகளுக்கு முன்னர் தத்து கொடுத்த தனது மகளை தந்தை கண்டுபிடித்த சம்பவம் நெகழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்தின் வில்ட்ஷயர் நகரைச் சேர்ந்தவர் கெவின் ஜோர்டான். இவர் தனது பள்ளி பருவத்தில் ஜாக்கி என்பவரை காதலித்து வந்தார். அப்போது அவர்கள் இருவருக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது.

ஆனால் பள்ளி பருவம் என்பதால் அவர்களது பெற்றோர் இதனை அவமானமாகக் கருதினர். எனவே அவர்களது அறிவுறுத்தலின் பேரில் அந்தக் குழந்தையை தத்து கொடுத்தனர்.

ஆனால் அவர்கள் வளர்ந்த பிறகு இருவரும் திருமணம் செய்து குழந்தைகள் பிறந்தன. இதற்கிடையே, கடந்த 2013 ஆம் ஆண்டு ஜாக்கி இறந்தார்.

அதன்பிறகு சிறு வயதில் தத்து கொடுத்த தனது மகளை கண்டுபிடிக்க கெவின் முடிவு செய்தார். இதற்காக தனியார் தொலைக்காட்சி உதவியை நாடினார்.

இந்நிலையில், அவரது மகள் ஹிலாரி என்ற பெயரில் சாலிஸ்பரி அருகே வசிப்பது தெரிய வந்தது. இதையடுத்து, அவர்கள் இருவரும் நேரில் சந்தித்தனர். 50 ஆண்டுக்கு பிறகு நடந்த இந்த சந்திப்பு இங்கிலாந்தில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பக்கங்கள் 03

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 05/10/2025

**வாகன அபகரிப்பில் ஈடுபட்ட 30 பேர் நயாகராவில் கைது**

கனடாவின் நயாகரா பகுதியில் பாரியளவில் வாகன அபகரிப்பில் ஈடுபட்ட 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புறொஜெக்ட் ரோட் கிங் என்ற பெயரில் பல மாதங்கள் 03▶




# கனடாவுக்குள் நுழைவதற்கு முயன்ற இந்தியக் குடும்பம் சிறையிலடைப்பு

**கனடாவுக்குள் நுழைய முயன்ற ஒரு இந்தியக் குடும்பம் கனடா எல்லைப் பாதுகாப்புப் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டதால், அவர்கள் அமெரிக்காவில் பல வாரங்களாகச் சிறையில் அடைக்கப்பட்ட சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.**

**இந்தச் சம்பவத்துக்குக் கனடா எல்லைப் பாதுகாப்புப் படையின் கெடுபிடியே காரணம் என்று குடும்பத்தின் வழக்கறிஞர் குற்றம் சாட்டியுள்ளார்.**

அமெரிக்காவில் வசித்துவரும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் அவர்களது இரு குழந்தைகள் அடங்கிய அந்தக் குடும்பம், கனடாவுக்குள் நுழைய முயன்றது.

அந்தக் குடும்பம், கனடாவில் நுழையத் தகுதி உள்ள ஒரு குறிப்பிட்ட விதிவிலக்கு பிரிவின் கீழ் விண்ணப்பித்திருந்தது. இந்த விதிவிலக்கின் கீழ் அவர்கள் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

ஆனால், கனடா எல்லைப் பாதுகாப்புப் படையினர், அவர்களின் விண்ணப்பத்தில் இருந்த மிகச் சிறிய முரண்பாடுகளை மட்டுமே பெரிதுபடுத்தி, குடும்பத்தை கனடாவுக்குள் அனுமதிக்காமல் திருப்பி அனுப்பினர்.

கனடாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டதால், அவர்கள் மீண்டும் அமெரிக்க எல்லைக்குத் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது, முறையான ஆவணங்கள் இல்லாத காரணத்தால், அமெரிக்க எல்லை அதிகாரிகள் அந்தக் குடும்பத்தின் நான்கு உறுப்பினர்களையும் கைது செய்து, பல வாரங்கள் சிறையில் அடைத்தனர்.

சம்பவம் தொடர்பில் இந்திய குடும்பத்தின் வழக்கறிஞர் கூறுகையில்,

"கனடா எல்லைப் பாதுகாப்புப் படையினர், நுழையத் தகுதி பெற்றிருந்த ஒரு குடும்பத்தை, சின்ன சின்னக் குறைபாடுகளைக் காரணம் காட்டி நிராகரித்தது மனிதாபிமற்ற செயல்.

ஒரு குடும்பம் அமெரிக்கச் சிறையில் அடைக்கப்பட்டதற்கு கனடா எல்லைப் பாதுகாப்புப் படையின் இந்த தேவையற்ற கெடுபிடியே முதன்மைக் காரணமாகும்" என்று கடுமையாகச் சாடியுள்ளார்.

இந்தச் சம்பவம், கனடா மற்றும் அமெரிக்காவுக்கு இடையேயான எல்லைக் கடக்கும் விதிமுறைகளின் சிக்கலையும், எல்லை அதிகாரிகளின் முடிவுகள் சாதாரண மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் பாதிப்புகளையும் அம்பலப்படுத்துவதாக அமைந்துள்ளது.




# இந்திய படங்கள் வெளியிடுவதால் கனடா திரையரங்குகளில் பரபரப்பு

கனடாவில் இந்திய திரைப்படங்கள் திரையிடப்பட்ட சில திரையரங்குகள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்பட்டதால், அங்குள்ள திரையரங்குகள் இந்தியப் படங்களின் திரையிடலை தற்காலிகமாக நிறுத்தியுள்ளன.

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் அமைந்துள்ள ஒரு திரையரங்கில் கடந்த ஒரு வாரத்தில் இரண்டு முறை தாக்குதல் நடந்துள்ளது.

முதன்முறையாக செப்டம்பர் 25 அன்று தீ வைப்பு முயற்சி செய்யப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து ஒக்டோபர் 2 அன்று அதே திரையரங்கின் நுழைவாயிலில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல்கள், ரிஷப் ஷெட்டியின் 'காந்தாரா: ஏ லெஜெண்ட் சாப்டர் 1' மற்றும் பவன் கல்யாணின் 'தே கால் ஹிம் ஓஜி' என்ற திரைப்படங்கள் திரையிடப்பட்டபோது நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இதன் பின்னர், திரையரங்க நிர்வாகம் பாதுகாப்பு காரணங்களால் இந்தியப் படங்களின் திரையிடலை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

முதல் சம்பவம் நடந்த செப்டம்பர் 25 அன்று அதிகாலை 2 மணியளவில் ஒரு சாம்பல் நிற எஸ்யூவி வாகனம் திரையரங்கின் வெளியில் வந்து நிமிடங்கள் சில நின்று சென்றதாக கண்காணிப்பு காட்சிகளில் பதிவாகியுள்ளது.

அதன் பின் இரண்டு சந்தேக நபர்கள் தனித்தனி வாகனங்களில் வந்து, திரையரங்கின் நுழைவாயிலில் பெட்ரோல் போன்ற திரவம் ஊற்றி தீ வைத்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதனால் பெரிய சேதம் ஏற்படவில்லை என்றாலும், அச்சத்தை உருவாக்கியிருந்தாக கூறப்படுகிறது.

அதே திரையரங்கில் ஒக்டோபர் 2 அன்று அதிகாலை 1.50 மணியளவில் மற்றொரு மர்ம நபர் நுழைவாயிலை நோக்கி பல சுற்றுகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

பொலிஸார், குற்றவாளி கருமையான தோல் நிறம் கொண்ட, கனமான உடல் அமைப்புடைய ஆண் என்றும், கருப்பு உடையும் முகமூடியும் அணிந்திருந்தார் என்றும் தெரிவித்துள்ளனர்.

இரண்டு தாக்குதல்களிலும் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இருப்பினும், இரண்டு சம்பவங்களுமே திரையரங்கின் நுழைவாயிலை குறிவைத்து நடத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், குற்றவாளிகளின் நோக்கம் குறித்து பொலிஸ் இதுவரை உறுதிப்படுத்தவில்லை என்றும், விசாரணை தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த சம்பவத்தின் பின்னால் காலிஸ்தான் அமைப்பினர் இருக்கலாம் என்றும் சந்தேகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.





# மனித கழிவுகளை உரமாக மாற்றும் கழிப்பறை கனடாவில் அறிமுகம்

உலகில் முதன் முறையை கனடாவில் வித்தியாசமான கழிப்பறையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

மனித கழிவுகளை முழுமையான இயற்கை முறையில் உரமாக மாற்றக் கூடிய தொழில்நுட்பத்துடன் இந்த கழிப்பறை வடிவமைக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் தாவரவியல் பூங்காவில் இந்த நவீன கழிப்பறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பூங்காக்கள் மற்றும் தொலைதூர இடங்களில் இந்த கழிப்பறையை பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கழிப்பறையில் திட மற்றும் திரவக் கழிவுகள் வேறுபடுத்தப்பட்டு உரமாக மாற்றும் செயன்முறை முன்னெடுக்கப்படுகின்றது.

களான்களின் வேர்களைக் கொண்டு இந்த மனித கழிவுகளை உரமாக மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயன்முறைக்கு மின்சாரம், நீர் அல்லது வெறும் இரசாயனப் பொருள்கள் எதுவும் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வாகன அபகரிப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையில் போதைப் பொருள்கள், துப்பாக்கிகள், பணம் மற்றும் அபகரிக்கப்பட்ட வாகனங்கள் கைப்பற்றப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 2024 ஓகஸ்டில் போதைப் பொருள் கடத்தல் தொடர்பான தகவல்கள் கிடைத்ததையடுத்து விசாரணை தொடங்கப்பட்டது.

ஆனால் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் விசாரணைகள் விரிவாக்கப்பட்டன என தெரிவிக்கப்படுகின்றது.

ரொரன்டோ பொலிஸார், கனடிய எல்லைப் பாதுகாப்பு அமைப்பு மற்றும் கனடிய பொலிஸார் ஆகிய தரப்புக்கள் இணைந்து இந்த விசாரணைகளை முன்னெடுத்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 9ஆம் திகதி நயாகரா, ஹாமில்டன், டொரோண்டோ உள்ளிட்ட பகுதிகளில் 12 இடங்களில் சோதனைகள் நடத்தப்பட்டன.

இதன் மூலம் 38 திருடப்பட்ட வாகனங்கள் மீட்கப்பட்டன. அவற்றின் மதிப்பு 3.3 மில்லியன் கனேடிய டொலர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சில வாகனங்கள் நைஜீரியா, வியட்நாம் போன்ற நாடுகளுக்கு கடத்துவதற்காக கண்டெய்னர்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.



சில வாகனங்களில் தொகுதி எண்கள் மாற்றப்பட்டிருந்ததால் அவற்றின் உண்மையான அடையாளத்தை கண்டறிவது கடினமாக இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், 12.25 கிலோ கோக்கெயின் மற்றும் 20 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

